**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR MULTI COLOUR GRANITE QUARRY PROPOSAL OVER AN EXTENT OF 10.00.0 HA -M/S.TVL.G.P.K. GRANITE INDUSTRY, S.F.NO. 884/1B, 1326, 1333/1A, 1B, 2, 1334/1 (P), 2(P), 3 AND 1334/4 OF THIRUTHANGAL VILLAGE, SIVAKASI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 17.07.2025, 11.00 A.M AT M/s.SURIYA MAHAL A/C, NO.263-E, NEAR POLICE STATION, SENGAMALANATCHIYARPURAM ROAD, THIRUTHANGAL, SIVAKASI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. S. Balaji | : | Revenue Divisional Officer<br>Sivakasi,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Er. S. Abdul Gafoor | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Government Officials, Public and Project proponent 194 Nos. (List enclosed) |

The public hearing was held on 17.07.2025 at 11.00AM at M/s.Suriya Mahal A/c, No.263-E, Near Police Station, Sengamalanatchiyarpuram Road, Thiruthangal, Sivakasi Taluk, Virudhunagar Districtunder EIA Notifications, 2006 for the Multi Colour Granite Quarry proposal over an extent of 10.00.0 Ha - M/s.Tvl.G.P.K. Granite Industry, S.F.No. 884/1B, 1326, 1333/1A, 1B, 2, 1334/1 (P), 2(P), 3 and 1334/4 of Thiruthangal Village, Sivakasi Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sivakasi, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinakaran" and "The New Indian Express" on 12.06.2025.He also informed that wide publicity was given about the conduct of public

hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sivakasi initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.Tvl.G.P.K Granite Industry Multi Colour Granite Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

**1. Mr.Balakrishnan (Ex-Councilor), BJP**

Mr. Balakrishnan said that the town of Tiruthangal is an ancient historic town during the Sangam period, and that this town is an area where working people residing and said that after 1982, people started building masonry houses by using Pongal bonus and bought loans according to their capacity and built houses. He said that after the quarry came, people in that area were getting heart attacks and their houses were shaking. Since the quarry was located in the center of the town. BJP will not allow this quarry. He said that this is a town where poor and simple people living. Hence, this quarry should not be allowed.

**2. Mr.Balasubramanian, CPM**

Mr. Balasubramanian said that a quarry was already operating in the Tiruthangal area of Sivakasi in Virudhunagar district, and the protest against that quarry turned into a people's protest. Everyone sold their own lands to the quarry owners and was displaced. The same people of Tiruthangal faced the same hardships 20 years ago. Entire people of thiruthangal participated in that protest and this became a massive people's protest. The livelihoods of the people became a big question mark. This is something that affects everyone. Currently, the survey number mentioned in this quarry does not provide any livelihood or guarantee for the ordinary poor and simple people around it. They are already surviving due to the firecracker

industry in Sivakasi. The establishment of the granite multi-quarry mentioned in this area, will not benefit these people or Sivakasi city or the people of Tiruthangal. You have said that the important aspect mentioned in the project assessment is that the total employment opportunities are for 47 people. You are mining at an estimated cost of Rs 7 crore. But this multi-granite quarry, which can provide employment to only 47 people, is not necessary for this town, he said. He said that we will not allow this quarry and that is why all the people of this town have come to this meeting. If the project proponent want to set up any quarry or if the government makes an attempt to do so, the people of Tiruthangal and Sivakasi will come together and stop this quarry. The government should cancel this public hearing meeting. The livelihood of these people should not be taken for granted, especially the state government, which has mineral resources in its hands to generate revenue for the revenue department. State Government can make revenue from various sectors but the state government is focusing only on the mineral resources sector. Due to this, the farmers and all the people around will be affected by the establishment of this quarry. Therefore, we, on behalf of everyone, request that this public hearing meeting be turned into a closing meeting and that an announcement be made that there are no possibilities for quarrying in this area.

3. **Mr. Gopi (Naam Tamilar Katchi)**

Mr. Gopi said that this new quarry is 10 hectares i.e. 24 acres. However, currently there is already a quarry in operation near that area. He also protested against the quarry and said that quarry should not be allowed. Following that, peoples gathered towards the stage and started chanting against the quarry and said that this quarry should not be allowed.

**4. Unknown Name (Viduthalai Siruthaigal Katchi Member)**

On behalf of the public and the Viduthalai Siruthaigal Katchi, what we are requesting is that earlier operated quarry in Thiruthangal was closed due to that its operation hindrance to the people, so it was closed. Reopening the quarry is wrong. Conducting a public hearing for it is even more foolish. We cannot accept this. We are warning you in this meeting that if the quarry is opened, a huge earthquake will erupt. On behalf of the public and the Viduthalai Siruthaigal Katchi. I conclude by telling all the people that the quarry, which has already been closed, should remain closed and should not be opened. We will not allow this proposed quarry to be opened.

5. **Mrs. Diana Xavier, Naam Tamilar Katchi**

Mrs. Diana Xavier said that she came to know the conduct of this public hearing meeting a day before this meeting and you have given notice to only two areas. That is condemnable. She said that this quarry has been harmful to them for 30 years. She also said that she does not trust the Pollution Control Board. She said that Pollution control Board says the pollution caused by the quarry during its operation is less than the pollution caused by bursting firecrackers. How can we believe that? She said that they say if the quarry is established, employment opportunities will increase in this area. So far, six quarries have been established in this area. She added that how many people have got employment opportunities, how many have achieved economic development and built houses. She added that how many got employment opportunities. Therefore, she asked the officials to stop using the word employment opportunities. She said that prepare a resolution that quarry is not required and we all sign that resolution. All 300 people who have come here say no to quarry. It is enough to improve the firecracker factory which provides employment to thousands of people. So, fireworks factory is enough for us.

**6. Mr.Selvaraj (BJP)**

Mr. Selvaraj expressed his complete opposition to the quarry.

**7. Mr.Sudhakaran (9th Ward Member)**

He said that this quarry is located in his ward. He said that the quarry has been affecting the town's water source for the past 25 years and affecting the environment. He said that houses have collapsed due to the quarry explosion noise. The new town that was to be built has been destroyed. He also expressed his opposition to the quarry. He said that our consensus is that no one should come to Thiruthangal with an idea of quarry.

**8. Mr.R.Sureshkumar, Town Secretary – Marxist Communist Party**

Mr. S. Sureshkumar said that everyone knows how the people of Thiruthangal have been affected by previously started 3 quarries. He said that permission should not be given for quarry. You are holding a meeting to start quarry again in Kannagi Colony. Listen to the people's opinion. You come to know only if the people tell you about the impact. How can you ask if you want a quarry or not? The people of Kannagi Colony are fighting for patta. But why is the government holding a meeting for the survival of the company? This is an unnecessary step for the people. He said why you not told them that the quarry is near a residential area. When they ask for a patta for the land, officials say it is pasture land. But if quarry owners ask,

official give permission for the quarry. He asked, how that is possible.

**9. Mr.Murugan**

He said that when he was studying school, the school building would shake when a quarry exploded. So, he said that don't want quarry.

**10. Mr.Karuppasamy**

Mr. Karuppasamy, the surrounding houses were affected by the previous quarry. I request that this quarry be completely banned as it is likely to come back.

**11. Mr.G.Parameswaran, Circle Secretary**

Mr. G. Parameswaran called for a complete ban on the establishment of this quarry.

**12. On behalf of Viduthalai Siruthaigal Katchi**

He said that 20 years ago there was no hill in this place in Sivakasi, but now 5 to 6 hills have formed in this area. He said that the quarries are being taken beyond the specified length and width. He said that there are residences and 10 schools around this quarry. That is being affected by this quarry. There is a High Court and Supreme Court order that the existing quarry should be closed. He said that the authorities should protect the people, but they are protecting the owner. This should be the final public hearing. The existing quarry should be closed. He said that the upcoming quarry should be stopped.

**13. Name not mentioned**

Officials are not solving our problems. It is sad that they are coming forward for this quarry which affects our lives and livelihood. It is sad that they are coming to conduct hearing for this quarry operation but not conducting review meeting for the firecracker industry. We will not allow it as long as our lives.

**14. Mr.Muneeshkumar, Sivakasi**

Mr. Munishkumar said that we are appealing to this meeting on behalf of the party and the public that there should be no quarrying in this area, and that the protest will continue only quarry is proposed to commence in this area.

**15. Mr.Murali, President, YRTV Matric Higher Secondary School**

Mr. Murali said that the Hon'ble High court appointed a official on 08.04.2015 and stated that quarries should not be established in this area as it is less than the 300 meters fixed by the High Court. The students studying in the nearby school would be affected by this

quarry. Therefore, on behalf of school he raised objection towards the establishment of this quarry in this area. He said that if this quarry comes there will be no safety for the students studying in our school.

**16. Mr.Radhakrishnan, Naam Tamilar Katchi**

Mr. Radhakrishnan said that the quarry is harming the people and the soil. He said that we will not allow this quarry at all. He said that people should not be repeatedly compromise in the name of employment opportunity.

**17. Mr.Ragupathi Pandian, Thiruthangal**

Mr. Raghupathi Pandian stated that earlier quarry operation were banned in that area in 2004. Did the rectified it ? What action did you take. Currently, there is no quarry operation there. Quarry proponent says in his presentation he said that the schools will be maintained. There is no need corporate money for a government school. That is the government's responsibility. He said that 30 years ago, Sengulam was a watershed area, and now it become sewer. They say that they will not blast, that is a lie. It does not matter if the quarry is far from the village, but you plan to bring it in the center of the village. He said that the quarry rule should be explained to the people clearly. Tiruthangal is not a village, it is a Corporation. He said that this quarry is in the center of the village and the school is nearby. Therefore, he said that there is no need for a quarry in this area and that this quarry project should be completely dropped.

**18. Mr.Murugesan, BJP, Thiruthangal**

He said that the people will be greatly affected by this quarry and therefore this quarry should not be allowed. The government is for the people. Not for individuals.

**19. Mr.Gopi, Sivakasi**

Mr. Gopi, when should this Public Hearing meeting be held by the Pollution Control Board? Is it before giving approval to this project? Or after giving approval? He asked that the approval has already been given to this project, and this Public Hearing meeting is being held only after the Pollution Control Board has given permission to this quarry. This is such a big injustice. The Public Hearing meeting should be held before giving permission. This is an injustice to the people of this area. A quarry is operating in 32 acres around here. Official should inspect how deep they are quarrying there. According to the study report given by the government, the quarry is still operating today. How far is that quarry being dug? How much

permission has the government given? How much has been cut? All these should be studied and appropriate action should be taken and the existing quarry should be closed. That is our demand. He said who asked for a new quarry. He said that the people do not have basic facilities and the existing quarry should be closed. Leaving aside all the quarries, the new quarry is 10 hectares, that is, 24 acres, and there is already a quarry on 32 acres. These should be closed. They have mentioned that there is a house 50 meters away near Satyanarayana Road. But, this quarry is within the Corporation limit. They have mentioned that the population of Tiruthangal is 9500. Do only 9500 people live near this quarry? He also said that they have mentioned 1000 people live in Sengamalanachiyarpuram village. He said that this report is wrong, that a meeting should be held before approval, but that they conduct this meeting after approval, and is this an eye washing? We will protest on a large scale by bringing brother Seeman to the field. If this Public Hearing goes beyond this and he warned that they will protest on a large scale.

**20. Mr.Alagu Murugan, Kannaki Colony**

He also said that the, 30 years ago, Kannagi Nagar and MGR Nagar areas were highly affected by the quarrying. Therefore, he said that this quarry should be cancelled, otherwise people will protest and permission should not be given to start the quarry.

**21.Thiru.Ganesan (H/o. Lakshmi, Ex-Chairman)**

Mr. Ganesan said that this quarry was first allotted to Ayya Nadar & Sons Mr. Kirathurai, Gnanaprakasam, Subash Chandra Bose, Ramamoorthy. Their memorial of their parents Ayya Nadar and Janaki Ammal is located at this place. The total area is 96.28 acres. Their mother's tomb is located over an area of 4 acres 28 cents of land. The remaining 92 acres of land was used by the old National Fire Works (P) Ltd Company. When Ayya Nadar died in 1982, the company was closed due to differences of opinion among the shareholders. From 2006 to 2010, I (Ganeshan), C.T. Ramachandran alias Appu, who owns a matchbox company in Sivakasi, and Balan, divided all the properties of the family across India among their heirs. After the 2010 partition, the 4 brothers and sisters entered into an agreement to set up a granite company over an area of 67.86 acres of land. At that time, PRP Company and Stanco Granite Company were operating in this area. It was during this period that they also decided to start this company and signed an agreement to start this company by investing Rs. 1 crore 5 lakhs each. Its total value is Rs. 4 crore 26 lakhs. This agreement was signed in 2010. Currently, its value is equal to Rs. 400 crores. This is recorded in the Registrar's Office on document number

3636/2010. From the profits generated from this company, they have decided to provide all the necessary facilities to a primary school located in Kannagi Colony and a primary school located in Sengamalanachiyarpuram, and have allocated Rs. 5 lakh per year. In 2012, the YRTV school administration and the Principal filed a case against the owner of the granite company and the owner of the land. If this quarry starts, it will pose a threat to the lives of 2000 students studying in this school. Therefore, the purpose of the case is to prevent the establishment of this quarry in this area. The verdict in that case was in favour of the plaintiffs in 2017. After that, the company was ordered to start the quarry only in 2022 for the quarry applied for in 2010. The order for quarry was issued in October 2022. The owner of this G.P.K Quarry Company is Mr. Subbareddy. The owner of this quarry has quarries in Andhra Pradesh and Karnataka. Why is he proposed to run a quarry in Thiruthangal? The owners are conspiring against the public. This is an act of cheating the people. He vowed that he would not allow this quarry to be established as long as he lives. When the All India Anna Dravida Munnetra Kazhagam was in power, permission was not given for this quarry. He concluded his speech by saying that as long as we have breath, we will not allow permission for this quarry.

**22. Name not mentioned**

The entire demand of this town is that this quarry should not be allowed. Please register this opinion right now, there is not a single person who can say yes, and I kindly request you to send the opinion of no to the higher authorities, he said.

**23. On behalf of Town Secretary, Communist Party of India**

Everyone here is well aware of this quarry. Many families and many areas have been affected by this quarry. There is no drinking water in the western part of this area. The drinking water has gone to the lowest level. Pollution Control Board officials has to come and to check the drinking water well near the police station. See how much pollution is there. It is not right for you to take a decision on your own. This is not right, he said.

After this, Revenue Divisional Officer, Sivakasi stated that he will convey to the Government that almost all the public's attended the meeting opposed the establishment of proposed quarry. However, he would like to ask if anyone wishes to express their opinion in support of the quarry. No one came forward. Since no one came forward, he will convey to the Government the opinion of this meeting.

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

| | | |
|---|---|---|
| Total number of written petitions received | - | 08 |
| Total number of petitions received in this office by post. | - | 09 |

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer
Sivakasi,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 15– pages, 194persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (Both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல் கிராமம், புல எண். 884/1B, 1326, 1333/1A, 1B, 2, 1334/1 (P), 2(P), 3 மற்றும் 1334/4-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள் தி/ள்.G.P.K. கிரானைட் இண்டஸ்ட்ரி - பல வண்ண கிரானைட் குவாரி தொடர்பாக 17.07.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள்.சூரியா மஹால் A/c, 263-E, காவல் நிலையம் அருகில், செங்கமலநாச்சியார்புரம் ரோடு, திருத்தங்கல், சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.சோ.பாலாஜி | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சிவகாசி,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி. ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | பொறி.அப்துல் கபூர் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 194 நபர்கள்.(பட்டியல்இணைக்கப்பட்டுள்ளது) |

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல் கிராமம், புல எண். 884/1B, 1326,1333/1A,1B, 2, 1334/1 (P), 2(P), 3 மற்றும் 1334/4-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.G.P.K கிரானைட் இண்டஸ்ட்ரி - பல வண்ண கிரானைட் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் தி/ள்.சூரியா மஹால் A/c, 263-E, காவல் நிலையம் அருகில், செங்கமலநாச்சியார்புரம் ரோடு, திருத்தங்கல், சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 17.07.2025 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சிவகாசி, ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினகரன்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில்

12.06.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்புகூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சிவகாசி அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/ள்.G.P.K கிரானைட் இண்டஸ்ட்ரி - பல வண்ண கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. **திரு. பாலகிருஷ்ணன், ( முன்னாள் கவுன்சிலர்) பாரதிய ஜனதா கட்சி சார்பாக**

திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், திருத்தங்கல் என்ற ஊர் வரலாற்று சிறப்பு மிக்க ஊர் ஆகும் எனவும், வரலாற்று சிறப்பு மிக்க இந்த ஊர் சங்க காலத்தில் பழமையான ஊர் ஆகும் எனவும், இந்த ஊர் உழைக்கும் மக்கள் இருக்கும் பகுதி ஆகும். அன்றாட வேலை செய்து பிழைக்கும் இந்த ஊரில் 1982 ஆம் ஆண்டு வரை மண் வீடுகள் தான் இருந்தன. 1982-க்கு பின்பு ஓட்டு வீடாக மாறின. பின்பு அவரவர் தகுதிக்கு ஏற்றாற்போல பொங்கல் போனஸ், கடன்களை வாங்கி வீடு கட்டினார்கள். கல்குவாரி வந்தபிறகு அந்த பகுதியில் உள்ளவர்களுக்கு மாரடைப்பு வருவதாகவும், வீடு அதிர்வு

ஏற்படுவதாகவும் கூறினார். அதனால் ஊரின் மையப்பகுதியில் கல்குவாரி அமைய வேண்டாம் என பாரதிய ஜனதா கட்சி சார்பாக கூறினார். இப்பகுதி ஏழை, எளிய மக்கள் வாழும் ஊர் எனவும், இக்குவாரியை அனுமதிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

2. **திரு. பாலசுப்பிரமணியன், CPM**

திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள், ஏற்கனவே விருதுநகர் மாவட்டத்தில், சிவகாசியில் திருத்தங்கல் பகுதியில் கல்குவாரி செயல்பட்டு கொண்டிருந்தது என்றும், அந்த குவாரிக்கு எதிரான போராட்டம் மக்கள் போராட்டமாக மாறி எல்லோரும் தனது சொந்த நிலங்களை கல்குவாரி உரிமையாளர்களுக்கு விற்பனை செய்துவிட்டு இடம் பெயர்ந்து போன அவலங்கள் இதே திருத்தங்கல் மக்கள் 20 ஆண்டுகளுக்கு முன் சந்தித்தனர். திருத்தங்கல் ஒட்டுமொத்த பகுதி மக்களும் அந்த போராட்டத்தில் பங்கேற்றனர். இது ஒரு பெரிய மக்கள் போராட்டமாக மாறியது. மக்களுடைய வாழ்வாதாரங்கள் மிகப்பெரிய கேள்விக்குரியாக மாறியது. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. தற்பொழுது இந்த குவாரியில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணில் அதனை சுற்றியுள்ள சாதாரண ஏழை எளிய மக்களுக்கான எந்த வாழ்வாதாரமும் உத்திரவாதமும் கிடையாது. ஏற்கனவே சிவகாசியில் பட்டாசு தொழில் மூலமாக தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அப்படி வாழக்கூடிய உழைப்பாளிகள் இருக்கக்கூடிய இந்த பகுதியில் குறிப்பிட்டுள்ள மல்டி கலர் கிரானைட் மல்டி குவாரி அமைவதால் இந்த மக்களுக்கோ அல்லது சிவகாசி நகரத்திற்கோ அல்லது திருத்தங்கல் பகுதி மக்களுக்கோ எந்த பயனும் கிடையாது. திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள முக்கியமான அம்சம் மொத்த வேலை வாய்ப்புகள் 47 பேருக்கு என கூறியுள்ளீர்கள். ஒரு 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுரங்கம் எடுக்கிறீர்கள். ஆனால் வெறும் 47 பேருக்கும் மட்டுமே வேலை வாய்ப்பை வழங்கக்கூடிய இந்த மல்டி கிரானைட் குவாரி இந்த ஊருக்கு அவசியம் இல்லை எனவும் கூறினார். இந்த குவாரியை அனுமதிக்க மாட்டோம் என்றும் அதற்காகவே இந்த ஊர் மக்கள் அனைவரும் இந்த இக்கூட்டத்திற்கு வருகை புரிந்திருப்பதாகவும் கூறினார். ஊர்மக்கள் எந்த ஒரு கல்குவாரி நிறுவனத்தை அமைப்பதற்கோ அல்லது அரசு அதற்கான முயற்சி செய்தால் திருத்தங்கல் மற்றும் சிவகாசி மக்கள் ஒன்று சேர்ந்து இந்த குவாரியை தடுத்து நிறுத்துவோம், அரசாங்கம் இந்த கருத்து கேட்பு கூட்டத்தை காலாவதி செய்யவேண்டும் எனவும் கூறினார். இந்த மக்களுடைய வாழ்வாதாரத்தை வேடிக்கை பார்க்கவேண்டாம் எனவும் குறிப்பாக மாநில அரசு, வருவாய்த்துறைக்கு வருவாய் ஈட்டுவதற்கு கனிம வளங்களை குறிப்பாக கையில் கொண்டுள்ளது. மாநில அரசுக்கு வருவாய் தரக்கூடிய ஏராளமான தொழில் இருப்பதாகவும், ஆனால் மாநில அரசு கனிம வளத்துறையை மட்டும் கவனம் செலுத்துகிறது. இதன் மூலம் ஏழை, எளிய விவசாய மக்கள் பாதிப்படைவதாகவும், இந்த

குவாரி அமைவதினால் சுற்றியிருக்கக்கூடிய அனைத்து மக்களும் பாதிப்படைவார்கள். ஆகவே இந்த கருத்து கேட்பு கூட்டம் நிறைவு கூட்டமாக மாற்றி இந்த பகுதியில் கல்குவாரி செயல்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்ற அறிவிப்பை எல்லோரும் சார்பாக நாங்களும் கேட்டுக்கொள்கிறோம் எனவும் தெரிவித்தார்.

**3. திரு. கோபி, நாம் தமிழர் கட்சி சார்பாக.**

திரு. கோபி அவர்கள், இந்த புதியதாக தொடங்கவுள்ள கல்குவாரி 10 ஹெக்டேர் அதாவது 24 ஏக்கர் மதிப்பு ஆகும். ஆனால், தற்பொழுது அப்பகுதிக்கு அருகில் ஏற்கனவே கல்குவாரி செயல்பாட்டில் இருக்கிறது. மேலும், குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்து அனுமதிக்க வேண்டாம் என்று தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து மக்கள் குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்து இக்குவாரிக்கு அனுமதி வேண்டாம் வேண்டாம் என முழக்கமிட்டவாறு இருந்தனர்.

**4. விடுதலை சிறுத்தைகள் கட்சி பிரதிநிதி (பெயர் அறியப்படவில்லை)**

பொதுமக்கள் சார்பாகவும், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாகவும் கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஏற்கனவே திருத்தங்கல் கல்குவாரி இயங்கியதனால், மக்களுக்கு இடையூறாக இருந்ததால்தான் அந்த கல்குவாரி மூடப்பட்டது. திரும்பவும் கல்குவாரியை திறப்பதென்பது என்பது தவறான ஒன்று. அதற்கு கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது என்று அதை விட முட்டாள்தனமானது. இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. கல்குவாரியை திறந்தால் மிகப்பெரிய பூகம்பம் வெடிக்கும் என்பதை இந்த கூட்டத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஏற்கனவே மூடப்பட்ட கல்குவாரி மூடியே தான் இருக்க வேண்டும் எனவும், அதனை திறக்கக்கூடாது என்றும் மக்கள் சார்பாகவும், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாகவும் அனைத்து மக்களுக்கும் கூறிக்கொண்டு நிறைவு செய்கிறேன் என்றார். இந்த கல்குவாரியை திறக்க விடமாட்டோம் எனவும் கூறினார்.

**5. திருமதி. டையானாசேவியர், நாம் தமிழர் கட்சி**

திருமதி. டையானாசேவியர் அவர்கள், இந்த கருத்து கேட்பு கூட்டம் தங்களுக்கு முந்தைய தினத்தில் தான் தெரியும் என்பதையும், இரண்டு பகுதி மக்களுக்குத்தான் நீங்கள் அறிவிப்பு கொடுத்துள்ளீர்கள். அதுவே கண்டிக்கத்தக்கது. 30 வருடங்களாக இந்த குவாரி தங்களுக்கு தீங்காக இருப்பதாகவும் கூறினார். மேலும் Pollution Control Board மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் மாசினை விட குவாரியின் செயல்படும்போது ஏற்படும் மாசு குறைவாக இருக்கும் என்று சொல்கிறீர்கள். அதை எப்படி நாங்கள் நம்புவது? என்றும், குவாரி அமையும் பட்சத்தில் இப்பகுதியில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்று கூறினீர்கள். இதுவரை இப்பகுதியில்

ஆறு குவாரிகள் அமைக்கப்பட்டுள்ளன. எத்தனை பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள், எத்தனை பேர் பொருளாதார மேம்பாடு அடைந்து வீடு, வாசல் கட்டியுள்ளார்கள் என்றும் வினவினார். யாருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்ததாக தெரியவில்லை. ஆகவே, வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற வார்த்தையை இனி பயன்படுத்தாதீர்கள் என்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். கல்குவாரி வேண்டாம் என்று தீர்மானம் போடுங்கள் நாங்கள் கையெழுத்து போடுகிறோம் என்று கூறினார். இங்கு வந்திருக்கும் 300 பேரும் வேண்டாம் என்று கூறினார். பட்டாசு தொழிற்சாலையை மேம்படுத்தினாலே போதும். அது பல ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பினை தரும். எனவே, பட்டாசு தொழிற்சாலை எங்களுக்கு அது போதும் என கூறினார்.

6. **திரு. செல்வராஜ், பாஜக.**

திரு. செல்வராஜ் அவர்கள், இந்த கல்குவாரியை முழுவதுமாக எதிர்ப்பு தெரிவிப்பதாக தெரிவித்தார்.

7. **திரு. சுதாகரன், 9வது வார்டு மாமன்ற உறுப்பினர்**

திரு. சுதாகரன் அவர்கள், எனது வார்டுக்கு உட்பட்ட பகுதி மற்றும் அதனை சுற்றி குவாரி அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார். 25 வருடங்களாக இந்த குவாரியினால் பாதிக்கப்பட்டதாகவும், ஊரின் நீர் ஆதாரம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் செங்குளம் கண்மாய் பாதிக்கிறது என்று கூறினார். கல்குவாரியின் வெடி சப்தத்தினால் வீடுகள் இடிந்ததாகவும், உருவாக்கப்படவேண்டிய புதிய நகரம் அழிந்ததாகவும் கூறினார். கல்குவாரிக்கு அமைய எதிர்ப்பு தெரிவித்தார். எங்களின் ஒருமித்த கருத்து கல்குவாரி என்ற எண்ணத்தோடு யாரும் திருத்தங்கல் வரக்கூடாது என்பதாகும் என்றார்.

8. **திரு. R. சுரேஷ்குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிட்ஸ்ட் கட்சி, நகர செயலாளர்**

திரு. R. சுரேஷ்குமார் அவர்கள், ஏற்கனவே 3 குவாரி தொடங்கப்பட்டதால் திருத்தங்கல் மக்கள் என்ன பாதிப்பு அடைந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். கல்குவாரி அமைய அனுமதி தர வேண்டாம் என எதிர்ப்பு தெரிவித்தார். நீங்க திரும்ப G.P.K குவாரியை கண்ணகி காலனியில் தொடங்க கூட்டம் நடத்துறீங்க மக்களுடைய கருத்துக்கு செவி சாய்க்கனும். மக்கள் பாதிப்பை சொன்னால் தானே தெரியும். மக்களுடைய கருத்துக்கு செவி சாயுங்கள். குவாரி வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டால் எப்படி? கண்ணகி காலனி மக்கள் பட்டாவிற்காக போராடுறாங்க. ஆனால் கம்பெனி பிழைப்பதற்கு அரசாங்கம் ஏன் கூட்டம் நடத்துறீங்க. இது மக்களுக்கு தேவை இல்லாத நடவடிக்கை. இக்குவாரி குடியிருப்பு பகுதிக்கு அருகில் இருக்கிறது என்பதை

ஏன் சொல்லவில்லை என கூறினார். பட்டா கேட்டால் மேய்ச்சல் நிலம் என்கிறார்கள். ஆனால் குவாரிக்கு மட்டும் அனுமதி கொடுக்கிறார்கள் அது எப்படி என்று கேட்டார்.

9. **திரு. முருகன்**

கல்குவாரி வேண்டாம். நான் படிக்கும் போதே குவாரியில் வெடி போடும்போது பள்ளி அதிரும். எனவே, கல்குவாரி வேண்டாம் என கூறினார்.

10. **திரு. கருப்பசாமி**

திரு. கருப்பசாமி, அவர்கள் இதற்கு முன்னர் உள்ள கல் குவாரியினால் சுற்றியுள்ள வீடுகள் பாதிப்படைந்தது. மீண்டும் கல்குவாரி வர இருப்பதால் இந்த கல்குவாரியை முழுமையாக தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

11. **திரு. G. பரமேஸ்வரன், வட்ட செயலாளர்**

திரு. G. பரமேஸ்வரன் அவர்கள் முழுமையாக இந்த கல்குவாரி அமைவதை தடை செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

12. **விடுதலை சிறுத்தை கட்சி சார்பாக:**

சிவகாசி பகுதியில் கடந்த 20 வருடத்திற்கு முன்பு இந்த இடத்தில் மழைக்குன்றும் கிடையாது என்றும், ஆனால் தற்பொழுது இந்த பகுதியில் 5 முதல் 6 மலைகள் உருவாகியுள்ளன எனவும் கூறினார். கல்குவாரிகள் வரையறுக்கப்பட்ட நீளம், அகலத்தை விட அதிகமாக எடுக்கப்படுகின்றன என கூறினார். இந்த கல்குவாரியை சுற்றிலும் வீடுகள் மற்றும் 10 பள்ளிகள் இருப்பதாகவும், இதனால் இவர்கள் பாதிக்கப்படுவதாகவும் கூறினார். ஏற்கனவே உள்ள குவாரியை மூடவேண்டும் என்பது உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் தீர்ப்பு இருக்கிறது. அதிகாரிகள் மக்களை பாதுகாக்க வேண்டும், ஆனால் முதலாளிகளை பாதுகாக்கிறீர்கள் என்று கூறினார். இதுவே இறுதியான கருத்து கேட்பு கூட்டமாக இருக்க வேண்டும். இருந்த கல்குவாரியை மூட வேண்டும். வரவிருக்கும் கல்குவாரியை தடுக்க வேண்டும் என்று கூறினார்.

13. **பெயர் குறிப்பிடாத நபர்**

எங்கள் பிரச்சனைகளை தீர்க்காத அதிகாரிகள். எங்கள் உயிரை, வாழ்வாதாரத்தை பாதிக்கும் இந்த கல்குவாரிக்காக வருவது வருத்தம் அளிக்கிறது. பட்டாசு தொழிலுக்கு ஆய்வு கூட்டம் நடத்தாமல் இந்த கல்குவாரி நடத்த வருவது வருத்தம் அளிக்கிறது. எங்கள் உயிர் உள்ளவரை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்று கூறினார்.

**14. திரு. முனீஷ்குமார், சிவகாசி**

திரு. முனீஷ்குமார் அவர்கள், இந்த பகுதியில் கல்குவாரி வேண்டாம் எனவும், மீறினால் போராட்டம் தொடரப்படும் எனவும கட்சி சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும் இந்த கூட்டத்தில் தெரிவித்துக்கொள்கிறோம் என கூறினார்.

**15. திரு. முரளி, முதல்வர், YRTV Matric Higher Secondary School**

திரு. முரளி அவர்கள், ஏற்கனவே இந்த 08.04.2015 அன்று உயர்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட 300 மீட்டருக்கு குறைவாக உள்ளதால் இந்த இடத்தில் குவாரி அமையகூடாது என்று அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதாகவும், இந்த குவாரி அமைவதினால் அருகில் உள்ள பள்ளியில் பயிலும் மாணவர்கள் பாதிப்படைய வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார். ஆதலால், தங்கள் பள்ளி சார்பாக இந்த பகுதியில் குவாரி அமைய ஆட்சேபனை தெரிவித்தார். இந்த குவாரி அமையும் பட்சத்தில் எங்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு உயிர்பாதுகாப்பு இருக்காது என்று கூறினார்.

**16. திரு. ராதாகிருஷ்ணன், நாம் தமிழர் கட்சி**

திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள், கல்குவாரி மக்களுக்கும், மண்ணுக்கும் பாதிப்பு ஏற்படுத்துகின்றது. இந்த கல்குவாரியை ஒரு நாளும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என கூறினார். வேலைவாய்ப்பு என்ற பெயரை சொல்லி திரும்ப திரும்ப மக்களை சமரசம் செய்து கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டாம் என்று கூறினார்.

**17. திரு. ரகுபதிபாண்டியன், திருத்தங்கல்.**

திரு. ரகுபதிபாண்டியன் அவர்கள், ஏற்கனவே 2004-ல் இதே பகுதிகளில் விதிகளை மீறி கல்குவாரிகள் செயல்பட்டதாக தடைசெய்தார்கள். அந்த விதிமுறைகளை சரி செய்தார்களா? என்ன நடவடிக்கை எடுத்தீர்கள். தற்பொழுது அங்கு குவாரி நடக்கவில்லை. ஆய்வறிக்கையில் பள்ளிகளை சரிசெய்வதாக கூறினார்கள். அரசு பள்ளிக்கு கார்பரேட் பிச்சை போடவேண்டிய அவசியமில்லை. அது அரசாங்கத்தின் வேலை. 30 ஆண்டுகளுக்கு முன்பு நீர்வரத்து பகுதியாக செங்குளம் கண்மாய் இருந்ததாகவும், தற்பொழுது இக்கண்மாய் சாக்கடையாக இருப்பதாகவும் கூறினார். வெடி போடமாட்டோம் என்று சொல்கிறார்கள். அது பொய். குவாரி ஊரை விட்டு தொலைவாக இருந்தால் பரவாயில்லை, ஊரின் மையப்பகுதியில் கொண்டுவர நினைக்கிறீர்கள். குவாரி விதியை மக்களுக்கு தெளிவாக சொல்லவேண்டும் எனவும், திருத்தங்கல் கிராமம் அல்ல, மாநகராட்சி எனவும் தெரிவித்தார். பள்ளிக்கூடம் அருகில் இருப்பதாகவும், இக்குவாரி ஊரின் மையப்பகுதியில் உள்ளதாகவும் கூறினார். எனவே இந்த பகுதியில் குவாரி தேவையில்லை எனவும், இந்த குவாரி திட்டத்தை முழுமையாக கைவிட வேண்டும் எனவும் கூறினார்.

**18. திரு. முருகேசன், திருத்தங்கல், பாஜக.**

இந்த குவாரியினால் மக்கள் மிகவும் பாதிப்படைவதாகவும், இதனால் இக்குவாரியை அனுமதிக்கக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டார். மக்களுக்காக தான் அரசு. தனிப்பட்ட நபருக்காக அல்ல என தெரிவித்தார்.

**19. திரு. கோபி, சிவகாசி**

திரு. கோபி, அவர்கள், இந்த கருத்து கேட்பு கூட்டம் மாசு கட்டுப்பாடு வாரியத்தால் எப்போது நடத்தப்படவேண்டும். இத்திட்டத்திற்கு அங்கீகாரம் கொடுப்பதற்கு முன்பாகவா? அல்லது அங்கீகாரம் கொடுத்தற்கு அப்புறமா? என வினவினார். அங்கீகாரம் இத்திட்டத்திற்கு ஏற்கனவே கொடுத்துவிட்டார்கள் எனவும், மாசு கட்டுப்பாடு வாரியம் இந்த குவாரிக்கு அனுமதி கொடுத்த பிறகு தான் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடக்கிறது. இதுவே எவ்வளவு பெரிய அநியாயம். கருத்து கேட்பு கூட்டம் அனுமதி கொடுப்பதற்கு முன்பே நடத்தவேண்டும். இதுவே இப்பகுதி மக்களுக்கு இழைக்கூடிய அநீதி. இங்கு சுற்றி இருக்கிற 32 ஏக்கரில் கல்குவாரி செயல்பட்டு கொண்டிருக்கிறது. அங்கு எத்தன அடி ஆழம் தோண்டி கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்யவேண்டும். அரசாங்கம் கொடுத்த ஆய்வறிக்கையின்படி இன்றும் கல்குவாரி நடைமுறையில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அந்த கல்குவாரி எவ்வளவு தூரம் தோண்டப்படுகிறது. அரசு எவ்வளவு அனுமதி கொடுத்திருக்கிறது. எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. இவை அனைத்தையும் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்து இருக்கின்ற கல்குவாரியை மூட வேண்டும். அது தான் எங்கள் கோரிக்கை. புதிய குவாரியை யாரு கேட்டது எனவும் கூறினார். மக்களுக்கு அடிப்படை வசதி இல்லை எனவும், இருக்கின்ற குவாரியை மூடவேண்டும் என்றும் கூறினார். அனைத்து குவாரியையும் விட்டுவிட்டு, புதிய குவாரி 10 ஹெக்டேர், அதாவது 24 ஏக்கர். ஏற்கனவே 32 ஏக்கரில் குவாரி இருக்கின்றது. இவைகளை மூட வேண்டும். சத்தியாநகர் ரோட்டின் அருகில் 50 மீட்டருக்கு அப்புறம்தான் வீடு இருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த குவாரி மாநகராட்சிக்குள் இருக்கிறது. திருத்தங்கல் மக்கள்தொகை 9500 என குறிப்பிட்டுள்ளனர். இந்த கல்குவாரியின் அருகில் 9500 பேர் தான் வசிக்கின்றனரா? எனவும் கூறினார். செங்கமலநாச்சியார்புரம் கிராமத்தில் 1000 பேர் வசிப்பதாகவும் கூறினார். இந்த அறிக்கை தவறானது எனவும், அங்கீகரிக்கும் முன்பே கூட்டம் நடத்த வேண்டும் எனவும், அங்கீகரித்தபின் வந்து கூட்டம் நடத்துகின்றனர் எனவும், இது என்ன கண்துடைப்பா எனவும் கூறினார். அண்ணன் சீமானை களத்தில் இறக்கி பெரிய அளவில் போராட்டம் பண்ணுவோம். இந்த கருத்து கேட்பு கூட்டம் இதற்கு மேல் கொண்டு போனால், பெரிய அளவில் போராட்டம் நடத்துவோம் எனவும், எச்சரிக்கை விடுப்பதாகவும், மீண்டும் போராட்டம் நடத்துவோம் எனவும் கூறினார்.

**20. திரு. அழகுமுருகன், கண்ணகி காலனி**

30 ஆண்டுகளுக்கு முன் கல்குவாரியினால் கண்ணகி நகர், எம்.ஜி.ஆர் நகர், பகுதி மிகவும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். எனவே இந்த குவாரியை ரத்து செய்யவும், இல்லையேல் மக்கள் போராட்டம் நடத்தப்படும் எனவும் குவாரி தொடங்க அனுமதி வழங்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

**21. திரு. கணேசன், (முன்னாள் நகர்மன்றத்தலைவர் லட்சுமி கணேசன் கணவர்)**

திரு. கணேசன் அவர்கள், இந்த கல்குவாரி (G.P.K) முதன்முதலில் அய்ய நாடார் & சன்ஸ் திரு. கிரகதுரை, ஞானபிரகாசம், சுபாஷ்சந்திரபோஸ், ராமமூர்த்தி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது ஆகும். இவர்களது பெற்றோர் அய்யநாடார் மற்றும் ஜானகி அம்மாள் இவர்களது சமாதி இந்த இடத்தில் அமைந்துள்ளது. மொத்தம் நிலப்பரப்பு 96.28 ஏக்கர் ஆகும். அவர்களது தாயார் சமாதி மட்டும் 4 ஏக்கர் 28 சென்ட் நிலத்தில் அமைந்துள்ளது. மீதமுள்ள 92 ஏக்கர் இடம் பழைய நேஷனல் பயர் ஒர்க்ஸ் (பி) லிட் கம்பெனி இயங்கி வந்தது. 1982-ல் அய்யநாடார் அவர்கள் இறந்தபோது பங்குதாரர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அந்த நிறுவனம் இழுத்து மூடப்பட்டது. 2006 முதல் 2010 வரை அந்த குடும்பத்தின் அனைத்து சொத்துக்களையும் நான் (கணேசன்), சிவகாசி பாண்டியன் நகரில் உள்ள தீப்பெட்டி கம்பெனி வைத்திருக்கும் அப்பு முதலாளி என்ற சி.டி.ராமசந்திரன் மற்றும் பாலன் ஆகிய மூவரும் சேர்ந்து தான் இந்தியா முழுவதும் இவர்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் அவர்களது வாரிசுகளுக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்தோம். 2010 பாகப்பிரிவினைக்கு பின் அண்ணன், தம்பிகள் 4 பேரும் 67.86 ஏக்கர் நிலத்தை கிரானைட் நிறுவனம் அமைக்கும் பொருட்டு ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். அந்த காலகட்டத்தில் இப்பகுதியில் பிஆர்பி நிறுவனமும், ஸ்டான்கோ கிரானைட் நிறுவனமும் இயங்கி வந்தது. இந்த காலகட்டத்தில் தான் இவர்களுக்கும் இந்த நிறுவனத்தை தொடங்க நினைத்து தலா ரூ.1 கோடியே 5 இலட்சம் ரூபாய் முதல் போட்டு இந்நிறுவனத்தை தொடங்க ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதன் மொத்த மதிப்பு 4 கோடியே 26 இலட்சம் ஆகும். இந்த ஒப்பந்தம் 2010ம் ஆண்டு போடப்பட்டது. தற்பொழுது அதன் மதிப்பு ரூபாய் 400 கோடிக்கு சமம். இது சார்பதிவாளர் அலுவலகத்தில் 3636/2010 அன்று ஆவணத்தில் பதியப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திலிருந்து வரும் லாபத்தில் கண்ணகி காலனியில் அமைந்துள்ள ஒரு பாலர் பள்ளிக்கும், செங்கமலநாச்சியார்புரத்தில் அமைந்துள்ள ஒரு பாலர் பள்ளிக்கும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதாக முடிவெடுத்து, ஆண்டொண்டிற்கு ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இது மக்களை ஏமாற்றும் செயல். 2011-ல் கிரானைட் கம்பெனி உரிமையாளர் மற்றும் நிலத்தின் உரிமையாளர்

நான்கு பேர் ஆக மொத்தம் 5 பேர் மீதும் YRTV பள்ளி நிர்வாகம் மற்றும் முதல்வர் ஆகியோர் வழக்கு தொடர்ந்தனர். இந்த குவாரி ஆரம்பித்தால் இந்த பள்ளியில் பயிலும் 2000 ஆயிரம் மாணவர்களுடைய உயிருக்கு அச்சுறுத்தலாக அமையும். ஆகவே இப்பகுதியில் இந்த குவாரி அமைவதை தடுக்க வேண்டும் என்பதே அவ்வழக்கின் நோக்கம் ஆகும். அந்த வழக்கின் தீர்ப்பு 2017-ல் வழக்கு தொடுத்தோர்க்கு சாதகமாக அமைந்தது. அதன் பின் 2010-ல் விண்ணப்பித்த கல்குவாரிக்கு 2022ம் ஆண்டு தான் கல்குவாரி ஆரம்பிக்கலாம் என்று இந்த நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டது. அக்டோபர் 2022-ல் அந்த ஆணை வழங்கப்பட்டது. இந்த G.P.K கல்குவாரி நிறுவனத்தின் உரிமையாளர் திரு. சுப்பாரெட்டி என்பவர் ஆவார். இந்த குவாரியின் முதலாளி ஆந்திரா, கர்நாடகாவில் குவாரிகள் வைத்து நடத்துகிறார். ஏன் திருத்தங்கலில் வந்து குவாரி நடத்துகிறார். முதலாளிகள் பொதுமக்களுக்கு எதிராக சதி செய்கிறார்கள். இது மக்களை ஏமாற்றும் செயல் ஆகும். என் உயிர் உள்ளவரை இந்த குவாரி அமைய அனுமதிக்க மாட்டேன் என்று சபதம் செய்தார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடைபெற்றபோது இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. எங்கள் உயிர் மூச்சு உள்ளவரை இந்த கல்குவாரிக்கு அனுமதி கிடைக்க விடமாட்டோம் என்று கூறி உரையை நிறைவுசெய்தார்.

## 22. பெயர் குறிப்பிடாத நபர்:

இந்த ஊரின் ஒட்டுமொத்த கோரிக்கையும் இந்த கல்குவாரி வேண்டாம் என்பதாகும். இப்போதே இந்த கருத்தை பதிவு செய்து கொள்ளவும் எனவும், வேண்டும் என்று சொல்வதற்கு ஒரு நபர் கூட இல்லை என்றும், வேண்டாம் என்ற கருத்தை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## 23. இந்திய கம்யூனிஸ் கட்சி சார்பாக, நகர செயலாளர்:

இந்த கல்குவாரி பற்றி இங்கு உள்ள அனைவருக்கும் நன்கு தெரியும். இந்த கல்குவாரியினால் பல குடும்பங்கள், பல பகுதிகள் பாதிப்படைந்துள்ளது. இந்த பகுதியின் மேற்கு பகுதியில் குடிதண்ணீர் கிடையாது. குடிதண்ணீர் அடிமட்டத்திலேயே போய்விட்டது. மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் வந்துள்ளீர்கள். காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள குடிதண்ணீர் கிணற்றினை போய் பாருங்கள். அதில் மாசு எவ்வளவு உள்ளது என்பதை பாருங்கள். நீங்களாக ஒரு முடிவெடுத்து போவது சரியல்ல. இது சரியானது அல்ல என கூறினார்.

இதன் பின்பு, வருவாய் கோட்டாட்சியர், சிவகாசி அவர்கள் இக்கூட்டத்திற்கு வந்த பொதுமக்களின் ஏகோபித்த கருத்தான "குவாரி வேண்டாம்" என்ற கருத்தை அரசிற்கு பரிந்துரை செய்கிறேன். இருப்பினும், குவாரிக்கு ஆதரவாக யாரேனும் கருத்து சொல்ல விரும்புகிறீர்களா என்பதை கேட்டறிய விரும்புகிறேன். யாராவது குவாரிக்கு ஆதரவாக கருத்து சொல்ல விரும்புகிறீர்களா என்று கேட்டார். யாரும் முன்வரவில்லை. யாரும் முன்வராத காரணத்தினால், குவாரி வேண்டாம் என்ற இக்கூட்டத்தின் கருத்தினை அரசிற்கு பரிந்துரை செய்வேன் என்றும் வருவாய் கோட்டாட்சியர், சிவகாசி அவர்கள் கூறினார்.

மேலும், இது தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சிவகாசி அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய குறுந்தகடு மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும் எனவும், மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 08 |
| இவ்வலுவலகத்தில் தபால் மூலம் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 09 |

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

வருவாய் கோட்டாட்சியர்,
சிவகாசி,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 15 பக்கங்கள், 194 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).